1990 மார்ச் 22]

ஆண்டியப்பனூர் அணை

*146 திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாணியம்பாடி தாலுகா ஆண்டியப்பனூர் அருகே ஆண்டியப்பனூர் அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம். உள்ளது.

(ஆ) இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் வனத்துறை நிலங்களைப் பெறுவதற்கு, வனத் துறையின் ஒத் திசைவு எதிர்பார்க்கப்படுகிறது. அது கிடைக்கப் பெற்றதும், திட்டம் குறித்து பரிசீலனை செய்யப்பட்டு அதனை துவக்குவது குறித்து அரசால் முடிவு மேற்கொள்ளப்படும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1974-லே அப்போது தமிழகத்தின் முதல்வராக கலைஞர் அவர்கள் இருந்தபோது போட்ட திட்டம். 15 ஆண்டுகள் ஆகிறது. அமைச்சர் அவர்கள் கூட வந்து அதைப் பார்வையிட்டு, உடனடியாகக் கட்டுவதாகச் சொன்னார்கள். அதற்கு மதிப்பீடு போடப்பட்டதா ? உடனே கட்டித் தருவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் இது ஆய்வு செய்யப்பட்டது. இந்தத் திட்டம் குறித்து நடவடிக்கை எடுக்கிற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் பல முறை இந்த அவையிலேயே இதை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 1986–87 ஆம் ஆண்டு ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ரூபாய் 657 இலட்சம் செலவில், இந்தத் திட்டத்திற்குச் சுமார் 254 ஏக்கர் பட்டா நிலங்களும், 25 ஏக்கர் புறம்போக்கு நிலமும், மற்றும் 98 ஏக்கர் வனத்துறை நிலமும் கையகப்படுத்தப்பட வேண்டி இருக்கிறது. இவற்றில் பட்டா நிலங்களையும், புஞ்சை நிலங்களையும் எடுப்பதில் கூட சிரமம் இல்லை. ஆனால், வனத்துறையிடமிருந்து நாம் 98 ஏக்கருக்கு இரு மடங்காகத் தந்து அவர்கள் ஒப்புதலைப் பெறுவதிலே தான் சிறிது காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்புதல் கிடைத்த பிறகு, இந்தத் திட்டத்தை நிச்சயமாக அரசு நிறைவேற்றும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து, இந்த ஆண்டே கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, வனத் துறையினுடைய அனுமதி நமக்குத் தேவைப்படுகிறது. அது வந்த பிறகு அதற்கு மறுபடியும் எஸ்டிமேட் ரிவைஸ் செய்யவேண்டும். அதன் பிறகு டெக்னிக்கல் சாங்க்ஷன் கிடைக்க வேண்டும். அதற்குப் பிறகு அரசாங்கத்தின் ஆணை பிறப்பிக்க வேண்டும். இவற்றை எல்லாம் அரசு விரைந்து செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ஆர். மகேந்திரன். அவர் முதலில் இடம் மாறி உட்கார வேண்டும். (குறுக்கீடு) திரு. பிச்சைமுத்து இந்தப்பக்கம் உட்காரவேண்டும்.

திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சுமார் 6 மாத காலத்திற்கு முன்பு வாணியம்பாடி தாலுக்காவிற்கு வருகை தந்து, ஆண்டியப்பனூர் அணை, புல்லூர் அணை ஆகிய இரண்டு அணை கட்டும் இடங்களை ஒரே நாளில் பார்வையிட்டார்கள். தற்போது ஆண்டியப்பனூர் அணை கட்டுவதாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கின்ற புல்லூர் அணை கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா, அல்லது இந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற புல்லூர் அணைக்கட்டுத் திட்டம் என்பது பாலாறு, வடாற்காடு மாவட்டத்திற்குள்ளே நுழைகின்ற நுழைவாயிலிலே கட்டப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அந்த இடத்தை நானே சென்று பார்வையிட்டேன். வடாற்காடு மாவட்ட எல்லையிலே அந்த அணை கட்டப்படுமானால் நீரினுடைய பரப்பளவு பகுதி Water spread area-கூட ஆந்திர மாநிலத்திலேதான் இருக்கிறது. இரண்டாவது அதற்கு வேண்டிய கேச்மென்ட் ஏரியாவும் ஆந்திர மாநிலத்திலேதான் வரும். மூன்றாவதாக, பாலாற்றிற்கு வருகிற, எப்போதாவது அத்தி பூத்தாற்போல வருகிற அந்தத் தண்ணீரை நம்பித்தான் செங்கல்பட்டு வரையிலும் உள்ள இடங்கள் குடிதண்ணீருக்காக இருக்கின்றன. இடையிலே ஒரு அணையைக் கட்டினால்—வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், செங்கை—அண்ணா மாவட்டம் இரண்டும் குடி தண்ணீருக்குப் பாதிக்கப்படக்கூடிய ஒரு அபாயகரமான சூழ்நிலை உருவாகும். எனவே, This scheme is not feasible and possible. Thank you.

1990 மார்ச் 22]

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புல்லூர் அணைக்கட்டுத் திட்டம் 1952-லேயே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அன்றைக்கு ஒப்புதல் அளிக்கக்கூடிய தருவாயில் வழக்கு மன்றத்திற்குச் சென்று தடை வாங்கி விட்டார்கள். அதற்குப் பிறகு இதுவரையில் தொடர்ந்து அந்தத் திட்டம் நடைமுறைக்குச் சாத்தியமான திட்டம், வட ஆற்காடு மாவட்டத்திற்கு மிக தேவையான திட்டம் என்ற அளவுக்குத்தான் அது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு நேரங்களில் அங்கே விஜயம் செய்து பார்வையிட்டார்கள். அது தேவையான திட்டம் என்ற முடிவுக்கு வந்து இருக்கிறார்கள். இப்போது திடீரென்று இந்த நிலைக்கு அரசு வந்ததற்கு அடிப்படை காரணம் என்ன? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற காரணங்கள் எல்லாம் அன்றைக்கு இல்லையா? புதிதாக இன்றைக்கு உருவெடுத்து இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1952 ஆம் ஆண்டு ஒரு திட்டம் மதிப்பீடு போட்டு விட்ட காரணத்தால் அதை 1952-ல் ஆய்வு செய்ததால் அதை அற்புதத் திட்டம் என்று ஒத்துக்கொள்ள முடியாது. ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் அதனால் மக்களுக்கு என்ன பலன் என்று பார்க்கவேண்டும். ஒன்று, புல்லூர் அணைக் கட்டுக் கட்டினால் அதனால் நீர்ப்பாசனத்திற்கு உதவுமா என்றால் அதுவும் இல்லை. பாசனத்திற்கு அதிலிருந்து நீர் எடுக்க முடியாது. சரி இரண்டாவது, அதனால் அங்கு பூமியில் ஊறும் நிலத்தடி நீரினால் (Ground Water) நமக்குப் பயன் ஏற்படுமா என்றால் அதுவும் ஆந்திரா மாநிலத்திற்குள்தான் நீர் பரப்பளவு (Water spread area) வருகிறது. எனவே நமக்கு அதிலேயும் பயன் இல்லை. ஆகவே இரண்டு பயனும் இல்லாததால் ஏதோ எழுப்பிவிட்ட ஒரு தோஷத்திற்காக அணையைக் கட்டவேண்டும் என்று கேட்பது முறையல்ல. அரசாங்கத்திற்கு நிதிநிலையும் அவ்வளவு சௌகரியம் இல்லை.

கண்ணாடிப்புத்தூர் அணைத் திட்டம்

*1876 திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கண்ணாடிப்புத்தூர் அணைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?